News
paper in Ceylon
P. M. G. NO. H. A
89/300 of 1939.

சிவமயம்

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெ[ந்தை இ]ணையடி நீழலே.

புத். ருசு] யாழ்ப்பாணம்—சர்வசித்து௵ சித்திரைமீ கஎ உ (1947 ஏப்பிரல் 29 செவ்வாய்க்கிழமை) [இல எ

## சைவாசாரம்

[சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள்]

பிரோரகாசாரியர், போதகாசிரியர் முத்திதாசாரியரென ஆசிரியர்முத்திறப்படுவர். பக்குவர்களாகிய சிஷ்யர்களை ஆசாரியரிடத்துச் செலுத்துபவர் பிரேரகாசிரியர் எனப்படுவர். சமய தீக்ஷை விசேஷ தீக்ஷை நிருவாண தீக்ஷைகளைச்செய்து சிஷ்பர்களுக்கு ஆசாரங்களைப் போதிப்பவர் போதகாசிரியர் எனப்படுவர். சிஷ்யர்களைப் பரீக்ஷித்துச் சிகாச்சேதத்தோடு கூடிய நிருவாணதீக்ஷை செய்து பாசத்தை நீக்குபவர் முத்திதாசாரியர் எனப்படுவர்: மாணாக்கருந் தாம் பெற்ற தீக்ஷை கிரமத்தால் சமயி புத்திரன் சாதகன் என முத்திறப்படுவர். ஆசாரியர்கள் நித்திய கருமம் முதலிய ஆசாரங்களைத் தாம் எப்பொழுதும் அநுட்டித்து மாணாக்கர்களையுங்கொண்டு செய்வித்தல் வேண்டும். குருமார் தாம் சிவத்தோடு அத்துவிதமாயிருப்பினும் சிஷ்பர்களுடைய உறுதியை நினைத்து, ஆசாரங்களை அநுட்டியாது விடுவாராயின் மாணாக்கரும் உடனே அவற்றை விட்டுவிடுவார்கள். நித்திய கருமாதிகள் ஞானநிட்டையுடையவர்களுக்கு நித்திரைசெய்வோர் கையிற்பொருள் போல அவை தாமே தவிரிற் குற்றமில்லை, அங்ஙனமின்றி, அவர்களே அவற்றைத் தவிர்ப்பாராயின் நரகத்து வீழ்தல் தப்பாது என்பது சிவாகம நூற்றுணிபு

ஆசாரியராலே அவரவர் அதிகாரத்துக் கேற்றவாறு போதிக்கப்பெற்ற சைவசமய ஆசாரங்களை அன்போடு அநுட்டித்தவர்கள் போகங்களையும் அந்தமில்லின்பத்து அழிவில் வீட்டையுமடைவர், சமயாசாரத்தில் அன்பாவது நித்திய நைமித்திகங்களை அநுட்டிப்பதிற் பிரயோசன முண்டென்று நம்பும் ஆஸ்திக புத்தியாம்.

காமிகாகமத்திலே "எல்லாவருணத்தாருக்கும் சுவதருமங்களை அநுட்டித்தல் சிரேஷ்டமானது எனவும், வாதுளாகமத்தில் "சிவாகமங்களில் எத்தருமஞ் சொல்லப்பட்டதோ, அதுவே மேலாக மதிக்கப்படும்; அத்தருமத்தை ஆசரித்தலினலே உலகத்தில் மேலான கதியை அடைகிருன்" எனவும் சொல்லப்பட்டிருக்கின்றது. அங்ஙனமே சிந்திய விசுவத்திலும் 'சுகத்தை விரும்பியவர்களாலே வருணத்திற்கும் ஆச்சிரமத்திற்கு முரிய தருமம் அநுட்டிக்கப்படத்தக்கது" என்று கூறப்பட்டிருக்கிறது. ஆசாரந் தப்பாதவர் நற்குடிப்பிறப்பு, நெடியவாழுன், செல்வம, அழகுடைமை நிலத்துக்குரிமை, செல்வாக்கு, கல்வி, ஆரோக்கியம் என்னும் எட்டுக்குணங்களும் நிரம்பப்பெறுவர் என்று ஆசாரக்கோவை கூறும். சைவசமயநெறி கூறவந்த பெரியார்.

'சரித்தார்க்குச் சைவசமய நெறியி
னுரித்தாங்கு புத்திமுத் தியும்"

எனக் கூறுவர். ஆதலினலே, சைவாசாரங்களை இயன்றவரை வழுவாது குருமாரும் சிஷ்பர்களும் அருள் நூலில் விதித்தவழி ஆசரித்தல்வேண்டுமென்று பெறப்படுகின்றது அருணூல்கள் என்றது வேதசிவாகமங்களை.

எல்லா வருணத்தாருக்கும் எல்லா ஆச்சிரமத்தாருக்கும் பொதுவான ஆசாரங்கள் பல உண்டு; வருணம் ஆச்சிரமம் முதலியவற்றால் ஆசாரங்கள் வேறுபடுவது முண்டு. முதன் மூன்று வருணத்தாரும் எப்பொழுதும் உபநயனந் தரித்தற்குரியர். சதுர்த்தர் தருப்பணகால முதலியவற்றிலேயே உபவீதந் தரித்தற்குரியர் என்று சுப்பிரபேதாகமம் விளம்பும், இது வருண வேறுபாடுபற்றி வந்த விதியாகும். சூத்திரருள்ளும் நைட்டிகர் எப்போதுந் தரித்தற்குரியர் என்பது ஆச்சிரம விசேடத்தால் வந்த சிறப்புவிதியாகும். செனசவிதி கூறுமிடத்திற் காரணாகமத்திலே கிருகஸ்தருக்குக் கூறியதிலிருந்து இருமடங்கு பிரமசாரியர்கட்கும் மும்மடங்கு வானப்பிரஸ்தருக்கும் நான்கு மடங்கு சந்நியாசிகட்கும் சொல்லப்பட்டிருக்கிறது. இது ஆச்சிரம வேறுபாட்டால் வந்த ஆசார பேதமாகும் முன்னைய யுகங்களில் ஆசாரிய பத்தினியைப் பாதந்தீண்டி வழிபடல்விதிக்கப்பட்டுள்ளது. இந்த யுகத்தில் குருபத்தினியுடைய பாதந் தீண்டி வழிபடல் விதிக்கப்பட்டிருக்கிறது.

அந்த யுகந்தோறு மடிதீண்டியருச்
சிக்கைதரு
மிந்தக் கலியுகத் தேயாது.

இது காலவேறுபாட்டால் வந்த விதியாகும். ஆலயத்தினுள்ளே உயர்ந்த ஆசனத்திலிருத்தல் குற்றமென்று விலக்கப்பட்டிருக்கிறது. பூஜை அக்கினிகாரியம் முதலியவை செய்வோர் ஆசனத்திலிருத்தல் திருக்கோயிலினுள்ளும் குணமென்று கூறப்பட்டிருக்கறது. கோயில் வீதியிலே வாகனத்தி லேறிப்போதல் குற்றமாம். மகோற்சவ முடிவிலே உற்சவாசாரியர் வாகனத்திலேறிக் கோயில் வீதியிலே திருவுலாப்போதல் குற்றமாகாது. ஆசாரியரைப் பூஜித்துத் திருவுலாவரச் செய்தல் ஆசார்யோற்சவம் என்று ஆகமங்கள் செப்பும். பூசைக்கு உபயோகமாகும் புஷ்பம் சந்தனம் முதலியவற்றைப் பூசை முடியுமுன் ஒருவன் தனக்கென உபயோகப்படுததுதல் சிவத்துரோகமாகிய அதிபாதகமாகும். சிவபூசையினிடையிற்றானே சிவபூசைக்கு முன்பே பூசகன் தன் காலின் கீழும் தன் மார்பிலும் தன் சிரசிலும் புஷ்பமும், தன் நெற்றியிற் சந்தனத் திலகமும் மந்திரத்தோடிடுவது ஆன்மபூசையாகிய சிவபுண்ணியச் செயலாகுமென்பது தந்திரசாரம் முதலியவைகளால் அறியப்படுகின்றது, இவை முதலியவை கிரியைகளுக் கியைந்த ஆசாரங்களாகும். சுவாமியின் நின்மாலியப்பொருள்களாகிய தீர்த்தம் சந்தன முதலியவற்றைப் பூசை முடிவில் ஆசாரியர் தா வாங்கி அணிந்துட்கொள்ளுக. அதனல் மூலவினைகள் தேயும்.

தொடர்ச்சி 6-ம் பக்கம்

## முத்துக் குளிப்பு

### அடுத்த ஆண்டு நிகழலாம்

இலங்கையில் முத்துக்குளிப்பு பல ஆண்டு காலமாக நிகழவில்லை. கடைசியாக 1925-ம் ஆண்டில்தான் முத்துக்குளிப்பு நிகழ்ந்தது. ஆனல் அது சித்திகரமாகவில்லை. கீழக்கரையில் இருந்து வரவேண்டிய தொகை முத்துக்குளிப்போர் குறித்தகாலத்துக்கு வாாதபடியால் அப்போது முத்துக்குளிப்பு வாய்க்கவில்லை.

ஏறக்குறைய 2000 முத்துக்குளிப்போர் அக்காலத்தில் தேவையாக இருந்தது. ஆனல் அவ்வளவு பேரும் ஆரம்பத்தில் வரவில்லை. 310 பேர் தான் ஆரம்பத்தில் வந்தனர். மீதிப் பேர் 17 நாட்களின் பின்னர்த்தான் வந்தனர், ஆனல் அதற்குள் சிப்பிகள் கலைந்துவிட்டன. அதன் பயனக அரசாங்கத்துக்கு நட்டம் ஏற்பட்டது.

அடுத்த ஆண்டு பிப்ரவரியில் முத்துக்குளிப்பதற்கான ஆரம்ப சோதனைகள் நிகழ்த்தப்படும். பார்களில் முத்துச்சிப்பிகள் போதிய அளவுக்கு இருக்கின்றன என அவ்வாரம்ப சோதனையிற் கண்டால், முத்துக்குளிப்புக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படும். குறைந்தபட்சம் 3 கோடி சிப்பிகள் இருக்கின்றன என்று கண்டால்தான் முத்துக்குளிப்பு நிகழுமாம்.

## கனவு பலித்தது!

### ஆனுற் பலன் இல்லை!

ஸ்விடன் தேசத்திலே ஹென்ரிக் கால்ஹானன் என்னும் ஓர் வயோதிபன் வசிக்கிருன். அவனுக்கு இப்போது வயது 80 ஆகிறது. சென்ற 40 ஆண்டு காலமாக இவன்விசித்திரமான ஓர் கனவு கண்டுவந்திருக்கிருன். பின்லாந்து எல்லைப்புறத்திற்கு சமீபமாகத் தான் ஓர் தங்கச் சுரங்கத்தைக் காண்பதாகவும், அதில் உள்ள தங்கம் யாவற்றையும் தான் தோண்டி ஸ்வீகரிப்பதாகவும் இவன் கனவு கண்டுவந்தான். ஒவ்வொரு முறையும் இவன் கனவு கண்டபின் கனவில் தோன்றிய இடத்துக்குச் சென்று தங்கச் சுரங்கத்தைத் தேடித்திரிவது இவன்வழக்கமாகிவிட்டது. நாற்பது வருஷ காலம் இப்படியே செய்துவந்த ஹென்றிக்கால்ஹானன் சென்றமாதம் உண்மையில் ஓர் தங்கச் சுரங்கத்தைக் கண்டுபிடித்தேவிட்டான். தான் கனவிற் கண்ட அதே தங்கச் சுரங்கத்தை அவன் உண்மையிற் கண்டுகொண்டான்.

தங்கச் சுரங்கத்தைக் கண்ட இவன்—கனவு நனவாகப் பலித்த இவன்—ஆநந்தமடையவில்லை, "இந்தச் சுரங்கத்தால் இந்தத் தள்ளாத வயதில் எனக்கு என்ன பயன்? இல்வாழ்க்கையில் பணத்தைக் கொண்டு, எதனை அனுபவிக்கப்போகிறேன்" என்று நெட்டுயிர்த்தானம்.

## துயின்றது போதும்!

## ஹிந்துக்களுக்கோர் வேண்டுகோள்

.... ஸ்ரீதரன் ...

அண்மையில் நிகழ்ந்த அகில இலங்கைச் சைவமகாநாட்டில் வரவேற்புச் சபைத் தலைவர் நியாயதுரந்தரர் ஸ்ரீ அ. அருளம்பலம் அவர்கள் சைவமக்களுக்கு — ஏன் அகில ஹிந்துஸ்தானத்துக்குமே — ஓர் சவால் விட்டிருக்கிருர். அந்தச் சவாலைச் சைவமக்கள் — ஹிந்துக்கள் — ஏற்று ஆவனசெய்யத் தயாராக இருக்கிருர்களா? இதுதான் இன்றுள்ள கேள்வி!

ஹிந்து சமுதாயம் பழங்கதை பேசுவதிலேயே தன் காலத்தைப் போக்கி வருகின்றது. முந்தி நான் கோடீஸ்வரன்; இன்று ஆண்டியானேன், ஒரு பணம் கொடுங்களென்ருற் கொடுப்பாரில்லை.

ஹிந்து சமுதாயத்தை நோக்கிப் போபத்துச் சூழுகின்றது. இன்று ஹிந்துஸ்தானம் சீர்கலங்கிலைமையிற் கிடக்கின்றது. நாயும் நரியும் கோட்டானும் தம் குகைக்குள் இழுத்துச் செல்லச் சமயம் பார்த்து நிற்கின்றன.

அன்று ஹிந்து மக்களின் சொந்தப் பூமியாகவிருந்த ஹிந்துஸ்தானத்தின் இன்றையநிலை என்ன? ஓர்கையில் வாளும் ஓர்கையிற் குர்ஆனுடன்வந்து எம்மவரை மதம்மாற்றின மகமத் கோரியும் அவன் கண்டார்களும! அன்று ஹிந்து மதத்திலிருந்து மதமாறிய அவர்கள்தான் இன்று முஸ்லிம்லீக்கின் பல தூண்கள். அவர்கள்தான் இன்று பாகிஸ்தானம் விழைந்து எங்கள் புண்ணிய பாரதபூமியைத் துண்டாடக் கங்கணங்கட்டி நிற்கிருர்கள்.

ஹிந்து சமுதாயம் பலம் கொள்ள வேண்டும். அதிலிருந்து ஓர் ஆடவனேனும் ஓர் பெண்ணேனும், ஓர் பாலனேனும், ஓர் வயோதிபனேனும் மதம் மாற நாம் விடக்கூடாது, விடவொண்ணுது! எம்மவருள் கெட்டோர் நொந்தோர் ஏன் மதம் மாறுகிருர்கள்? இதனை ஆராயவேண்டும். ஸ்ரீமான். அருளம்பலமவர்கள் கூறியாங்கு இனியும் பழங்கதைகள் பேசவேண்டாம். இனிக்கருமத்தில் ஈடுபடுவோம், நம்மவர் மதம்மாற்றப்படுதலைத் தடுப்பதோடு நாம் நிற்கவொண்ணுது. ஏற்கெனவே மதம்மாறியவர்களையும் மீண்டும் எங்கள் ஹிந்து சமுதாயத்திற் சேர்க்கவேண்டும்.

ஹிந்துக்களே! விழிமின்! எழுமின்; கண்ணைத்துயின்று அவமே காலத்தைப் போக்கியது போதும். இன்றே இப்புநித தொண்டினை ஆற்றவம்மின்! அகில இலங்கைச் சைவமகாசபை வழிகாட்ட முன்வரவேண்டும். அதனுடன் மற்றும் ஹிந்து ஸ்தாபனங்களும் ஒத்துழைக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடிதர்க்கு விஞ்ஞாபனம்

இப்பத்திரிகைக்குக் கடிதங்களையும் ஏதும் சமாசாரங்களையும் எழுதி யுதவும் அபிமானிகள், சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல் என்ற முறையை இயன்றவரையில் அநுசரித்து, தாளின் ஒருபக்கத்தில் மா[illegible] தெளிவாக எழுதியனுப்ப[illegible] வேண்டும். அபிமானிகள் எழுதியனுப்பும் கடிதங்களைத் தொகுக்கவும் திருத்தவும் மிகையானவற்றைத் தவிர்க்கவும், தகாதனவெனக் கண்டவற்றை ஒதுக்கவும் பத்திராசிரியர்களுக்கு அதிகாரமுண்டென்பதையும், இப்பத்திரிகையை ஆதரியாதவர்கள் வெளியிடும்படி எழுதியனுப்பும் கடிதங்கள் இடம்பெறு வென்பதையும் அன்பர்கட்குத் தெரிவிக்கின்றேம்.

—பத்திராசிரியர்.

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், சர்வசித்துஸு
சித்திரைமீ கூ௨ செவ்வாய்க்கிழமை

## "தந்தம் சாதிநெறி கடவாது சிவனை வழிபடுதல்"

'யாவராயினும், தங்கள் தங்கள் சாதிக்கு விதித்த விதி கடவாது நின்று சிவனை வழிபடின் முத்தி பெறுவர். அவ்விதி கடந்தோர் பயன்பெறுர். திருநாளைப்போவார் நாயனுர் தாம்முற்பிறப்பிற செய்த புண்ணிய மிகுதியினலே சிவனிடத்து மெய்யன்பு உடையாராகி, தாம் இழிவாகிய புலையர் குலத்திற் பிறந்தமையால அதற்கு ஏற்பச் சிவனுக்குத தொண்டு செய்தலே முறையாமென்று சிவாலயங்களதோறும் பேரிகை முதலிய ஒருமுகக் கருவிகளுக்கும் மிருதங்கம் முதலிய இருமுகக் கருவிகளுக்கும் தோலும், வாரும, வீணைக்கும் யாழுக்கும் நரம்பும், அர்ச்சனைக்குக் கோரோசனையும் கொடுத்தலும், ஆலயங்களின் திருவாயிற்புறத்தில் நின்றுகொண்டு ஆனந்த மிகுதியினலே கூத்தாடிப் பாடுதலும் செய்தனர். வாத்தியங்கள் கொடுததல் புண்ணிய மென்பது "பொங்கு பேரிகை பொருமிர சம்மிரு— தங்கமோடு திமில்பட காதயுஞ் — சங்கு தாளந் தகுமிசைக் காகளம் — விங்கு சீரொலி வேணுவு மவீணையும்" 'சொன்ன வின்னவை சோதி நிலாவணி — மன்னவற்கு வழங்கிய ம தவ— ரன்னவன்றனை யொத்த யுதந்தருக்— துன்னு கற்ப மவன் பதி தோய்வரால" எனச் சிவபுண்ணியத் தெளிவிலே கூறுமாற்ருல் உணர்க. ஆனந்தத்தினுல் ஆடல் பாடல்கள் புண்ணிய மென்பது 'நிருத்தமெசந்தைமுன் யாவர் நிகழ்த்தினும் — விரித்த பானு வயுதம் விரி கதிர் — பொருத்துதேர்ற் புலவரரம்பையர் — சுருத்தி னுடகங் காண்பர் சிவபுரி". "துதிபுங் கீதமுஞ் சோதிமுன் பத்தியாற் — கெதியினே திடக் கேட்டவர் தாவா — மதியில் கீடங் கிருமி வான் பதி — வதியுமோதினர்க் கென்கொல் வகுப்பதே" எனச் சிவபுண்ணியத் தெளிவிலே கூறுமாற்ருல் உணர்க. இவையெல்லாம் தம்மிடத்து இடையருத மெய்யன்போடு செய்தமையால் அன்றே; சிவன் திருப்புன்கூரிலே இவர் விரும்பியபடியே தமக்குமுன் உள்ள இடபதேவரை விலகச்செய்து இவருக்குக் காட்சிகொடுத்தருளினர்."

இது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் தாம் அக்காலத்திற் பரிசோதித்து அச்சிட்டு வெளியிட்டுள்ள பெரியபுராணப் பதிப்பில், திருநாளைப்போவார் நாயனுர் (நந்தனுர்) புராணத்தின் சூசனமாக எழுதிய அரிய வாக்கியமாகும்; இந்த யாழ்ப்பாணப் பெரும்பிரிவிலும் இலங்கையின் ஏனைய பாகங்களிலும் வாழும் சைவமக்கள் எச்சாதியினைச் சேர்ந்தவராயினும் திருக்கோயிலிலே தெய்வத்தை வழிபடும்வண்ணஞ் செல்லும்போதெல்லாம் தம் மூதாதைகள் பாரம்பரியமாகச் செய்துவந்த இந்த நெறியையே இன்றுங் கடைப்பிடித்தொழுகி வருகின்றனர்; சாதியிற் குறைந்தோர் விஷயத்திலே "தீண்டாதார்" "தாழ்த்தப்பட்டார்" என்ற இவ்வகையான சொல்வழக்கு எங்கள் யாழ்ப்பாணத்திலே இல்லையெனலாம். மேலான சாதியிற் பிறந்தவரென் றிருப்பவர் தாழ்ந்த சாதியினரெனச் சொல்லப்படுபவரை ஆதரித்து நடத்தி வருகின்றனரே யன்றிப் புறக்கணித்தலும் அவமதித்தலும் இந்த நாட்டிலே இல்லையெனலாம். எவ்வகைச் சாதியினரும இங்கே பரஸ்பரம் அன்போடுதான் வாழ்கின்ருர்கள்; மேலும் இந்தவூரில் தாழ்ந்த சாதியினரெனச்சொல்லப்படுவோர்காலந்தோறும் பல்லாற்ருனும் சீர்திருந்தியும் விருத்தி யடைந்தும் வருகிருர்கள்; கல்வியிலும் ஒழுக்கத்திலும் பெரும்பாலினேர் நன்மையடைந்து வருகிருர்கள்; இவற்றைக்கண்டு மேல்சாதியினரென்றிருப்போர் பொருமையடைதலின்றி இன்னும் அவர்களை நல்வழியிலே ஊக்கப்படுத்த வேண்டுமென்ற கொள்கையோடு தாம் முயற்சி செய்துவருகிருர்கள்.

இப்படி யெல்லா மிருப்பவும், இந்தியாவிலே பெரும்பான்மையான ஊர்களில் நடைபெறும் சாதிச்சண்டை, சமயச்சண்டை, அரசியல் உரிமைச் சண்டை காரணமாக எழுந்த பிணக்குக்களையும் விபரீதங்களையும், தெய்வநம்பிக்கையற்றவர்களும், அரசியல் விஷயமாகச் சுயநலங் கருதுபவர்களும், அந்நிய மதத்தினருள் ஒருபகுதியினரும் ஒவ்வொரு நோக்கம பற்றி ஆலய வழிபாடு முதலிய சமய சம்பந்தமான விஷயங்களிலே தாழ்ந்த சாதியினரென் றிருப்போரைத் தம் பழைய கொள்கைக்கும் சமயாசாரத்திற்கும் விரோதமாகக் கருமஞ் செய்யத் தூண்டுதற்கு முயல்கின்ருர்கள்; இப்படிச் செய்பவர்கள் யாரென்று ஆராயப்புகின் பெரும்பாலும் தெய்வபக்தி சமயப்பற்று ஆசாரஒழுக்கம் முதலியனவற்றவரும் தந்நலங் கருதுவோருமாகிய நம் சமயத்தவர்களும் அந்நிய மதத்தவர்களுள் ஒருசாராருமேயாவர்; இவர்கள் செய்யுஞ் சூழ்ச்சிகள் எக்காலத்திலும் இந்நாட்டிற்கும், நாட்டிலே வழங்குஞ் சமயங்களுக்கும் மக்கட்கள் தத்தம் சமயத்தை விதிப்படி அநுட்டித்து ஈடேறுதற்கும் இடையூருய் முடியுமேயொழிய எல்லவகையானநன்மையும்பயக்கமாட்டாவாம்.

# குறிப்புக்கள்

### ஊதாரித்தனம்

இலங்கை மந்திரசபையினரின் கணமூடித்தனமான ஊதாரித்தனத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டியகாலம் வந்துவிட்டது. இந்த நிதிவருடத்தின் முதலாறுமாதகாலத்துககாய வருமானம், செலவு சம்பந்தமான புள்ளிவிபரங்களிலிருந்து, இலங்கை ஓர் ஆபத்தான பாதையை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது என்று தெரியவருகிறது. செலவுக்கு மிஞ்சிய வருவாய் இப்போது கிடைககிறது என்பது உண்மை ஆனல் இது இன்னும் எத்தனைகாலத்துக்கு? அத்துடன் பலவிதமான புதிய செலவினங்களை மந்திரசபையினர் அங்குரார்ப்பணம் செய்ய இருக்கிருர்கள். இச்செலவினங்கட்கெல்லாம் பணம் எங்கிருந்து வரப்போகின்றது? மக்கள்மீது வரிவிதிப்பதற்கும் ஓரெல்லையுண்டு. அந்த எல்லையை மந்திரசபையினர் அடைந்துவிட்டனர். அதனைத் தாண்டுவரேயானுல், மக்களிடையே மனக்கொதிப்பும் கிளர்ச்சியும் ஏற்படுவது நிச்சயம். இப்போதும் சரி இலங்கை மந்திரிகள், இந்நாட்டு வருவாயிற் பெரும்பாகத்தை விழுங்குபயன்றராத் திட்டங்களைக் கைவிடுத்து, சிக்கன முறையைக் கையாள்வரேயானுல், அவர்களும் இந்நாடும் இனியும் உஜ்ஜீவிக்க மார்க்கமுண்டு

* * *

### கோவதை

கோவதைக்கும், மாட்டிறைச்சி உண்பதற்கும் எதிராக ஓர் கிளர்ச்சி தென்இலங்கையில் இன்று தோன்றியிருப்பதை நாம் வரவேற்கிறேம் ஹிந்துக்களையும் பௌத்தர்களையும் பெரும்பான்மையினராகக் கொண்டுள்ளது இந்தநாடு. ஜீவகாருண்யம், அகிம்சை என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட தர்மம் விளங்க வேண்டிய நாடு இது. ஆனல் மேனுட்டுப் பழக்க வழக்க அதிர்ச்சியின் காரணமாக, இங்கேயும், இப்போது மாமிச பட்சணம் மக்களிடையே மலிந்துவிட்டது இதனைத் தடுக்க வேண்டும். ஆனல், இந்த இயக்கத்தினை ஆரம்பித்து இயக்கி வருபவர்களுக்கு ஓர் விஷயத்தை அறிவுறுத்த விரும்புகிறேம். இந்த இயக்கம் பூரணமான அகிம்சாமுறையில் இயக்கப்படல் வேண்டும், பலாத்காரம் இதில் இடம்பெறக்கூடாது. பலாத்காரச் செயல்களிலும் இவ்வியக்கத்தினர் சிலர் இறங்கிவிட்டார்கள் என்று சில பத்திரிகைகள் முறையிடுகின்றன. இத்தகைய இயக்க ஆரம்பத்தில், பொறுப்பற்றவர் சிலசமயங்களில் பலாத்காரத்தில் ஈடுபடுவதும் சகஜம்தான், ஆனல் அவர்களின் அளவுகடந்த உத்ஸாகத்தை ரசுக்கி அதனை நல்லமுறையில் வகுப்பது அறிஞரது கடமையாகும். கேவலம் வாயில்லாப் பிராணிகளைக் கொன்று இச்சாணுடம்பை வளர்க்கும் பழக்கம் ஒழியவேண்டும். இந்த இயக்கம் நல்லமுறையில் விருத்தியாகி, தான் கொண்ட லட்சியத்தை அடைய கருணமூர்த்தியான இறைவன் அருள் சுரப்பானுக.

* * *

### கிராமச்சங்கங்கள்

நம் கிராமச்சங்கத் தலைவர்கள் பலர், தம் கடமைகள் மாயல் பிரகாரம் கான்கள், தெருக்கள், பாதைகள் வெட்டுவிப்பது, திருத்துவிப்பதுடன் நின்று விடுகின்றன என்று நினைத்துவிடுகிருர்கள். கிராமப்பரிபாலனத்துக்கு இவை வேண்டியனதான் என்பதை நாம் மறுப்பதற்கில்லை. ஆனல் இவற்றைச் செய்வதுடன் தம் கடமை-சேவை நின்றுவிட்டது என்று இவர்கள் நினைக்கவொண்ணுது. எம் கிராமங்களுக்குச் செய்ய வேண்டிய தொண்டுகள் அநேகம் உண்டு கிராமக் கைத்தொழில்களைப் புநருத்தாரணம் செய்தல், கிராம மக்களிடையே கல்வி அபிவிருத்தி செய்தல், ஒறுப்பனவு இயக்கத்தை அபிவிருத்தி செய்தல் என்பன கிராமச்சங்கத்தலைவர்கள் செய்யக்கூடிய சிறந்த கைங்கரியங்களிற் சிலவாகும். இதனை யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கிராமச்சங்க மகாநாட்டுத் தலைவர் திரு. ஸி. தியாகராஜா இற்றைக்குச் சின்னுட்களுக்குமுன் நிகழ்ந்த தீவுப்பகுதிக் கிராமச்சங்கங்கள் கூட்டத்தில் மிகச்சிறப்பாகத் தெருட்டியுள்ளார். அவர் கூறிய நல்ல புத்திமதியை நம் நாட்டுக் கிராமச்சங்கத் தலைவர்கள்கிரகித்து,ஏற்றனவற்றைச் செய்வரேயானுல்,கிராமமக்களின்சுபீட்சம் வெகுதூரத்தில்இல்லை. இந்நாட்டின் உயிர்நாடி கிராமங்கள்தான். கிராமங்கள் முன்னேறினுல்தான் நாடு முழுவதும் க்ஷேமமடையும். கிராமப் புநருத்தாரண இயககத்திலேயே இலங்கையின் எதிர்கால வாழ்வு தங்கியிருக்கிறது என்ற உண்மையை உணர்ந்து, இந்நாட்டுக் கிராமச்சங்கத்தலைவர்கள் தம் மகத்தான பொறுப்பைத் திறம்பட வகித்துவருமாறு கேட்டுக் கொள்ளுகிறேம்.

## பிளவு அதிகரிப்பு!

### சமசமாஜிகள் படும் அவதி!

சமசமாஜக் கட்சிக்கிடையில் வரவரப் பிளவு அதிகரித்து வருகிறது. இப்போது இக்கட்சி இரண்டாகப் பிரிந்திருக்கிறது. ஒன்று டக்ரர் என். எம் பெரீரா தலைமையிலும், மற்றது டக்ரர் கொல்வின் R. டீ. சில்வா தலைமையிலும் கருமம் ஆற்றி வருகிறது. இந்த இரு கட்சிகளுக்குமிடையே மீண்டும் ஒற்றுமை வரும் என்பதற்கான அறிகுறிகள் இல்லை. இதன்பயனுக, அடுத்ததேர்தலில் மிஸ்ரர் சேனநாயக்காவுக்கு எதிராக நிற்கும் மிஸ்ரர் எட்மன்ட் சமரக்கொடி வெற்றியடைவார் என்று சொல்வதற்கில்லை.

அவான்வலையில் டக்ரர் பெரீராவுக்கு விரோதமாக நிற்பதில்லை என்று இப்போது அத்தொகுதிப் பிரதிநிதியாகவிருக்கும் மிஸ்ரர் R. E. ஜெயத்திலகா முன்னர்த் தீர்மானித்திருந்தனர் இப்போது சமசமாஜி கட்கிடையேயிருக்கும் பிளவைக் கண்டு, அவர் அத்தொகுதியிலேயே போட்டியிடுவது என்று நிச்சயித்துவிட்டார் என்று தெரிகிறது.

இப்படியாகச் சமசமாஜிகள் பரஸ்பரம் பிணக்கும் விரோதமும் பாராட்டி வருவதால், சேனுயக்காக் கோஷ்டியான ஐக்கிய தேசியக்கட்சி அடுத்த தேர்தலில் மிகவும் சுலபமாக வெற்றியடைந்துவிடும் என்று சொல்லப்படுகிறது.

## சம்பளம் 40,000 டாலர்

## ஆனல் வரி 26,052 டாலர்

பிரிட்டிஷ் பிரதம மந்திரிக்கு ஓர் வருஷச் சம்பளம் 40,000 டாலர். அதாவது 1 லட்சத்து 33 ஆயிரம் ருபாவுக்கு மேல். ஆனல் இவ்வளவு பணத்தையும் அவர் பெறுவதில்லை. இச்சம்பளத்தில் பலவிதமான வரிகளுக்காகவும் ஏறக்குறைய 868210 ரூபா அவருடைய வேதனத்திலிருந்து கழிக்கப்படுகிறது. மீதி 46,160 ரூபாவரைதான் அவர்க்கு வேதனமாகக் கிடைக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக அரசியல் அரங்கம்

# மொஸ்கோ நாடகமுற்று!

## சாதித்தது ஒன்றும் இல்லை

### வியற்நாம் போர்

பிரான்சிய ஏகாதிபத்திய வெறியினுல் விளைந்த வியற்நாம் சுதந்திரப் போராட்டம் இன்னும் ஒழிந்தபாடில்லை. நேர்மாருக இப்போதுதான் போராட்டம் மும்முரமாக நிகழ்கின்றது. இந்தோசீனத்தின் மாகாணுதிபதிகளில் ஒருவராய ஆரன்பர்ல கெலாத்தா உட்படப் பல பிரான்சியர் சென்றவாரம் உயிரிழந்தனர். பிரான்சிய அரசாங்கம், உழுத்துப்போன தனது ஏகாதிபத்தியக்கொள்கையை இப்போதாவது ஒதுக்கிவைத்துவிட்டு, இந்தோசீனத்தலைவரான டக்ரர் ஹோ கீ-மின்ஹ் என்பவருடன்சமாதானத்துக்கு வரல்வேண்டும். ஆனுல் இந்த நல்ல புக்தி அவர்களுக்கு இதுவரை வரவில்லை.

○

### யூதப் பிரச்சினை

பலஸ்தீனத்து யூதப்பிரச்சினைநேற்றைபத்தினம (திங்கள்) ஐக்கியதேசஸ்தாபனத்தின் ஆலோசனைக் கெடுத்துக்கொள்ளப்பட்டது. இதற்கிடையில் பலஸ்தீன யூதர் தம படங்கர இயக்கத்தைக் கைவிட்டதாகத் தெரியவில்லை சென்ற வெள்ளிக்கிழமை பல பிரிட்டிஷ பொலிஸ் அதிகாரிகள் பலஸ்தீனத்தில் யூதப் பயங்கர இயக்கத்தினாற் கொலைசெய்யப்பட்டார்கள்.

○

### யூகோஸ்லேவியாவின் ஜம்பம்

ஹிட்லர் அதிகாரத்திலிருந்தபோது, அவருடைய பக்கத்தில் இருந்தனர் என்று சில யூகோசிலாவியர், யூகோசிலாவிய அரசாங்கத்தாற் குற்றமசாட்டப்பட் டிருக்கின்றனர். இப்படிக் குற்றஞ்சாட்டப்பட்டிருப்பவர்கள் இப்போது அமெரிக்கர், பிரிட்டிஷார் மேற்பார்வையிற் சிறைபாளராக இத்தலியில்இருக்கிறார்கள். இவர்களைத் தன்னிடம் ஒப்படைக்கவேண்டும் என்று யூகோசிலாவிய அரசாங்கம் கேட்கிறது. அப்படிச்செய்ய முடியாது என்று ஆங்கில-அமெரிக்கர் கூறுகின்றனர். யூகோசிலாவியா இன்று ருஷியாவின் செல்வாக்கில் உள்ளது.

○

### மொஸ்கோ நாடகம்

மொஸ்கோநகரில்பலவாரகாலமாக நிகழ்ந்துவந்த அந்நியநாட்டு மந்திரிகள் மகாநாடு ஈற்றில் ஓர் கருமமும் சாதிக்சாமல் விகடநாடகமாக முடிந்துவிட்டது. ஜெர்மனி விஷயமாக என்னவிதமான கொள்கையை இனிக கொள்ளவேண்டும் என்பதில் ஒற்றுமை ஏற்படாமற் போய்விட்டது. இதன் பயனுக ஜெர்மனி இனி இரு கூறுகளாகவே இருக்கும். ஆங்கில - அமெரிக்கர்க்குடைய பங்கு மேற்கு ஐரோப்பாவுடன் சேர, ருஷியர்க்குஉள்ள கிழக்குப்பக்கம் கிழக்கு ஐரோப்பியநாடுகளுடன் இணைக்கப்படலாம். இப்போதுள்ள நிலையின் படிக்கு, ஐரோப்பா இரண்டு கூருக்கப்பட்டுவிட்டது. அடுத்த யுத்தத்துக்கு இதுவே ஏதுவாக இருக்கலாம்.

○

### மன்னர் தம்பதிகளின் ஆபிரிக்காப் பிரயாணம்

சென்ற பிப்ரவரிமாதம் தென்னுபிரிக்காவுக்குப் புறப்பட்ட பிரிட்டிஷ் மன்னர் தம்பதிகள் தம் யாத்திரையை முடித்துக்கொண்டு சென்ற வியாழக்கிழமை இங்கிலாந்துக்குப் பிரயாணமாயினர். மன்னர் தம்பதிகள் மேமாதம் 12ம் திகதி இங்கிலாந்துக்கு மீளுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் பிரயாணத்தால் இங்கிலாந்து, தென்னுபிரிக்கா என்னும் இரு சாம்ராஜ்ய நாடுகளுக்குமிடையே ஏற்கெனவே இருந்த பரஸ்பர உறவு மிகவும் நெருங்கியதாய்விட்டது என்று பிரிட்டிஷ்-தென்னுபிரிக்க அரசியல்வாதிகள் பேசிக்கொள்ளுகின்றனர். இதுகாறும் இங்கிலாந்துக்குப் பெருந்துணையாயிருந்த இந்தியா, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தினின்றும் பிரிந்துவிட்ப்போவதால், இங்கிலாந்தின் எதிர்கால வாழ்க்கை இப்படியான சாம்ராஜ்ப நாடுகளின் நட்பிலேயே தங்கியுள்ளது. மன்னர் தம்பதிகளின் தென்னுபிரிக்கா விஜயம் அரசியற்காரணங்களை முன்னிட்டே செய்யப்பட்டது என்பது ஓர் பகிரங்க இரகசியம்.

○

### ருஷியாவில் நாஸித்தலைவர்கள்

ஹிட்லர் காலத்தில் ஜெர்மனியில் பெரும் பதவிகள் வகித்த நாஸிக்கட்சித் தலைவர்களிற் பலர் இன்று ருஷிய ஆதரவில், ருஷியாவின் பாகமாகிய ஜெர்மனியில் பெரிய பதவிகளை வகிக்கிருர்கள என்றும், அவர்களுக்கு ருஷியா சகலவிதமான சௌகரியங்களையும் செய்து கொடுக்கிறதென்றும் ஆங்கில-அமெரிக்கச் செய்தி ஸ்தாபனம் ஒன்று கூறுகிறது,

தொடாச்சி 4-ம் பக்கம்

இந்திய அரசியல்

# ஜின்னுவுக்குத் தவணை

## மவுன்ற் பேற்றன் அவித்தாரா?

### லியாகத் அலியின் சேட்டை

பண்டிதர் ஜவஹர்லால் சமஸ்தானுதிபதிகள் விஷயமாகச் செய்த பிரசாரணமும், சமஸ்தானுதிபதிகளில் மூன்றிலொரு பங்கினர்க்குமேல் இப்போதே அரசியல் நிர்மாண சபையிற் சேர்ந்திருப்பதும், ஜின்னுவின் கைப் பொம்மையான லியாகத் அலிகானுக்கு (இவர் இடைக்கால அரசாங்கத்தில் நீதிமந்திரியாகவும் இருக்கிருர்) அளவுகடந்த ஆத்திரத்தை விளைத்திருக்கிறது. பண்டிதர் நேரு இப்படியெல்லாம் வெருட்டக்கூடாது. வெருட்டி ஓர்சில சமஸ்தானங்களை அரசியல் நிர்மாணசபை என்னும் விகடநாடகத்திற் சேர்த்து விட்டார் என்றெல்லாம் இந்த லியாகத் அலிகான் ஓர் அறிக்கை விடுத்தார். இவர்க்கு பீக்கானீர் மகாராஜா தக்க ஓர் சூடு கொடுத்திருக்கிருர். சமஸ்தானுதிபதிகள் எவரதும் கைப்பொம்மைகளல்ல. இந்தியாவின் சுதந்திரத்தில் அவர்கள் பற்றுடையவர்கள்; அவர்களுக்கு லியாகத் அலிகான் இல்லது முஸ்லிம்லீக் பாடம் படிப்பிக்க வேண்டியதில்லை என்னும் கருத்துப்படப் பீக்கானீர் மகாராசா ஓர் அறிக்கை விடுத்திருக்கிருர்.

●

### பிரிவினைக்கு அமோக ஆதரவு

வங்காளத்தைப் பிரிவினை செய்ய வேண்டுமென்ற இயக்கம் மிகவும் பலங்கொண்டு விட்டது. பாஞ்சாலத்திலும் அப்படித்தான். சென்றவாரம் கல்கத்தாவின் பிரபல பத்திரிகையான "அமிர்த பஜார் பத்திரிகை" ஓர் வாக்கெடுப்பு நிகழ்த்தியது. வங்கப் பிரிவினை வேண்டுமா? வேண்[illegible]ன்று மேற்கு வழகாளத்து மக்களிடம் கேட்டது. மேற்கு வங்கமக்களை இவ்விஷயமாக அறிவிக்கவேண்டும் என்றும் கேட்டது. அதன் கேள்விக்கிணங்கி மேற்கு வங்கத்தில் உள்ளவர்களில் 534,249 பேர் தம்அபிப்பிராயத்தை வெளியிட்டனர். அவர்களில் 98 விகிதத்தினர்க்குமேல் பிரிவினை கட்டாயம் வேண்டுமென்றனர். அரை விகிதத்தினர் பிரிவினைவேண்டாம் என்றனர். ஒரு விகிதத்தினரின் வாக்குச் சீட்டுக்கள் செல்லுபடியாகா என்று நிராகரிக்கப்பட்டன. வங்கப் பிரதமர் ஷுராவர்த்தியும் ஜின்னுவும் இனி என்ன செய்வர்?

●

### சிந்துமாகாணப் பிரிவினை

சிந்து மாகாணத்தையும் பிரித்துவிடு என்று அம்மாகாணத்தில் உள்ள ஹிந்துக்கள் கிளர்ச்சிசெய்ய ஆரம்பித்துவிட்டார்கள். சென்றவாரம் கராச்சியில் நிகழ்ந்த அகில ஹிந்து பஞ்சாயத்து மகாநாட்டில் பிரிவினை வேண்டும் என்று ஓர் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது. ஸிந்து மாகாணத்தில் இப்போது முஸ்லிம்லீக் ஆட்சி செய்கிறது. அது ஹிந்துக்களுக்கு என்ன என்ன இன்னல்களை விளைக்க முடியுமோ. அந்த இன்னல்களை யெல்லாம் தாராளமாகச் செய்துவருகிறது. இதனை ஸிந்து ஹிந்துக்கள் ஆதாரபூர்வத்துடன் காட்டி, ஸிந்தில் தமக்கென ஓர் ஸ்தானம் வகுக்கவேண்டும் என்று நிற்கின்றனர். அந்தோ ஜின்ஞ சாய்புவின் பாகிஸ்தான் என்ன கதியடையுமோ அறிகிலேம்!

●

### தவணை கொடுக்கப்பட்டது

நேற்றைத்தினம் இராஜப் பிரதிநிதி ம்வுன்ற் பேற்றன் எல்லைப் புறத்துக்கு விஜயஞ் செய்திருக்கிருர். அங்கே நிகழும் சட்டமறுப்பின் தன்மையை அவர் நேரே கண்டறிவார். இதற்கிடையில் அவர் சென்றவாரம் ஜின்னுவை மீண்டும் ஒருமுறை கூப்பிட்டுச் சம்பாஷித்ததாகத் தெரிகிறது. இச் சம்பாஷணையைப் பற்றிப் பல பத்திரிகைகள் பலவிதமான அபிப்பிராயங்கள் கூறுகின்றன. இந்தியாவின் பிரச்சினையை இப்போது இராஜப்பிரதிநிதி நன்கு உணர்ந்துவிட்டார். கூடியசீக்கிரத்தில் ஓர் முடிவு கூறவும் தீர்மானித்துவிட்டார். ஒன்றில் இந்தியா பிரிக்கப்படாமல் தனி ராஜ்யமாக "பிரிட்டிஷ் மந்திரிகள் மூந்தி வகுத்த திட்டப்படி இருக்க வேண்டும், இல்லையேல், வங்காளம், பாஞ்சாலம் என்னும் இரு மாகாணங்களையும் துண்டாடிவிட்டு, ஸிந்து, மேற்கு பாஞ்சாலம் கிழக்கு வங்காளம் என்பவற்றை மாத்திரம் கொண்ட பாகிஸ்தானை ஏற்கத் தயாராக இருக்க வேண்டும். இதற்குமேல் ஒன்றும் பேச முடியாது என்று இராஜப்பிரதிநிதி ஜின்னுவுக்குக் கூறியுள்ளார் என்றும், இதனை நன்கு ஆராய்ந்து, மே மாதம் 5-ந் திகதிக்கு முன் தமக்கு ஓர் முடிவு சொல்லும்படி ஜின்னுவுக்கு அவர் கூறியிருக்கிருர் என்றும் சொல்லப்படுகிறது.

# ஒரே இடத்தில்!

## நாலு அபேட்சகரும் பேசினர்

கட்டுடை இளைஞர் முன்னேற்றச் சங்கம்,பாராளுமன்றத்துக்குஅபேட்சகராக வட்டுக்கோட்டைத்தொகுதியிலிருந்து முன்வர இருப்பவர்கள் நால்வரையும் ஒரே இடத்துக்குக் கூப்பிட்டு அவர்கள் தங்கள் கொள்கைகளைத் தனித்தனி விளக்கும்படி சென்ற வாரம் செய்திருக்கிறது. குறித்த தொகுதிக்கு நால்வர் அபேட்சகராகப் புறப்பட்டிருக்கிருர்கள்! 1 ஸ்ரீ கனகரத்தினம் (தமிழ்க்காங்கிரஸ் சார்பாக) 2. ஸ்ரீ ஹன்டிபேரின்பநாயகம், 3 ஸ்ரீ க.சண்முகம், 4 ஸ்ரீ வீ. வீரசிங்கம் எனபவர்களே அவர்கள். இவர்கள் நால்வரும் சென்றவாரம் நிகழ்ந்த குறித்த கூட்டத்தில் தங்கள் கொள்கைகளை விரித்து உரைத்தனர்.

இலங்கை பூரண சுயராஜ்பத்தை அடையவேண்டும்; அப்போதுதான் மக்களின் வறுமைப்பிணி நீங்கும். அதற்குச் சிங்களர் தமிழர் ஒற்றுமை வளரவேண்டும். ஆனுல் தமிழ்மக்களின் மூலாதாரமான உரிமைகளைப் பாதுகாக்கவேண்டும் என்று முதலாவதாகப் பேசிய ஸ்ரீ சண்முகம் கூறினுர். இன்னும் அவர்தாம் சமதர்மக் கொள்கைகளுக்கு விரோதமானவர் என்றும் தெரிவித்தார்.

ஸ்ரீ ஹன்டி. பேரின்பநாயகம் அடுத்ததாகப் பேசினுர். இந்நாட்டுக்குச் சுதந்திரம் அவசியம் வேண்டியது. சுதந்திரம் என்றால் என்ன? அந்நிய ராட்சி நீங்கிவிடுவதால்மாத்திரம்சுதந்திரம் வந்துவிடாது, மக்கள் யாவரும் இன்[illegible]கையா[illegible] தமிழர் வகுப்புவாதக் கொள்கை பூண்டு தனித்தியங்குவதால் பயன் கிடைக்க மாட்டாது. இலங்கைவாழ் சகலசாதியினர் சமூகத்தினருடன் ஒத்துழைக்கவேண்டும் என்று ஸ்ரீ பேரின்பநாயகம் கூறினுர்.

தமிழ்க் காங்கிரசின்சார்பில் அபேட்சகராகவுள்ள ஸ்ரீ கனகரத்தினம் தம கொள்கைகளை அடுத்ததாக எடுத்துக்காட்டினுர். அவர் தமது பிரசங்கத்தின் ஆரம்பத்தில், இப்படியான தேர்தல் அமளிகள் ஆகாது என்றும், பிரதிநிதித்துவம் வாய்ந்த பெருமக்கள் கூடி, ஓர் தொகுதிக்கு இன்னுரையே தெரிந்தனுப்பவேண்டுமென்று தீர்மானித்தால், தாம் அதன்படி நடக்கச்சித்தமாயிருப்பதாகவும் தெரிவித்தார். மேலும் அவர் பேசுகையில் தமிழ்க் காங்கிரஸ் வகுப்புவாத ஸ்தாபனம் அல்லவென்றும், சிங்களருடன் ஒத்துழைப்பதையே அதுவும் லட்சியமாகக் கொண்டிருக்கிறது என்றும் கூறினுர்.

ஸ்ரீ வீ. வீரசிங்கம் பேசுகையில், தாம எந்தக் கட்சியிலும் சேராதவர் என்றும், ஒத்துழைப்பு முறையிலேயே அரசியல் விஷயங்களை நடத்த வேண்டும் என்றும், சமயவாழ்க்கை, ஒழுக்கநிலை எனபவற்றை ஆதாரமாகக் கொண்டே சமூகம அமைக்கப்படவேண்டும் என்றும் கூறினுர்.

### டக்ரர் கொல்வின் ஆர். டி. சில்வா விடுதலை

சென்னை ஆலைத்தொழிலாளர் வேலைநிறுத்தம் சம்பந்தமாக அம்மாகாண அரசாங்கத்தாற் சிறையாக்கப்பட்ட இலங்கை சமசமாஜக்கட்சித் தலைவர் டக்ரர் கொல்வின் ஆர். டி. சில்வா சென்ற சனிக்கிழமை விடுதலையக்கப்பட்டார்,

### ஒன்றும் சொல்லாதே!

அரசாங்கப்பகுதிகளின் தலைவர்களாயுள்ளார், தங்கள் பகுதிகளின் பரிபாலனம் சம்பந்தமாகப் புதினப் பத்திரிகை நிருபர்கள் மூலமாகச் சில தகவல்களை வெளியிடுவது வழக்கம். ஆனுல் இந்த வழக்கத்துக்குக் கல்வி மந்திரி கன்னங்கரா முற்று வைக்கத் தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது.

கல்வி மந்திரி கன்னங்கரா இப்போது வித்தியாசர்த்தருக்கு ஓர் நவமான கட்டளை விதித்திருக்கிருராம். எந்தப் பத்திரிகை நிருபர்க்காவது எவ்வித தகவலும் கொடுக்கவொண்ணுது, அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கும் மறுமொழிசொல்லவொண்ணுது என்பதே அவர் கட்டளையாம்.

பத்திரிகையாளர் விஷயமாகக் கல்விமந்திரி இவ்வாறு வெருட்சியடைவது ஏன்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிட்டிஷார் விஷமம்!

## சோவியத் பத்திரிகையின் குற்றச்சாட்டு

"இந்தியாவுக்கு இ[illegible] சுயராஜ்யம் கொடுக்கப்போகி[illegible] என்று பிரிட்டிஷார்கூறுவதெல்லாம் வெறும் பொம்மலாட்டக் கூத்து" என்று பிரபல சோவியத் (ருஷிய) பத்திரிகையான "நியூ டைம்ஸ்" கூறுகிறது; அப்பத்திரிகை மேலும் கூறுவதாவது:

"இந்தியாவைச் சுதந்திரமாக்கும் கைங்கரியம் இன்னும் முற்றுக்கப்படவில்லை. இன்றும் இந்தியா பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளின் வாலில் தான் தொங்குகிறது,

"வேண்டுமென்று தூண்டப்பட்ட அரசியல் பொருளாதார, சமூகப் பிணக்குகள் இந்தியாவில் வாழும் மக்களுக்கிடையே புகுத்தப்பட்டிருக்கின்றன. உள்நாட்டிலே சமாதானத்தையும் அமைதியையும் நிலைநாட்டல், சுதந்திரத்துக்கான வழிவகைகளை ஆயத்தப்படுத்தல், தன் அயல்நாட்டுக் கொள்கைகளை உருவாக்கல் என்னும் இன்னோரன்ன விஷயங்களில் இந்தியா முன்னேறுவதற்குப் பலவிதமான முட்டுக்கட்டைகள் இந்த அந்நிய ஆதிபத்தியத்தால் இடப்படுகின்றன.

'இந்தியாவிலே சோவியத் மக்களுடன், சோவியத்கொள்கைகளுடன் அநுதாபம் பூண்டுள்ளவர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய அநுதாபத்தையும் நல்லெண்ணத்தையும் கெடுத்து, இந்தியா, ருஷியா என்னும் இரு நாடுகளுக்குமிடையே உண்மையான சாஸ்வதமான நட்பு ஏற்படாமலிருக்க என்ன என்ன செய்யவேண்டுமோ அவற்றையெல்லாம் இந்த விஷமிகள் செய்துவருகிறார்கள். சோவியத் ருஷியாவைப்பற்றிப் பலவிதமான, தப்பபிப்பிராயங்கள் பரப்பப்படுகின்றன, உலகிலேயே மிகவும் அகன்றனவாய், மிகப்பெருந்தொகை மக்களையுடையனவாகவுள்ள இந்த இரு கண்டங்களும் (இந்தியாவும் ருஷியாவும்) நட்புப் பூண்டுவிட்டால் தங்கள் கும்மாளத்துக்கு உலகில் இனி இடமில்லை என்று முதலாளித்துவ நாடுகள் அஞ்சுகின்றன."

## நிறத்திமிரா?

### 5000 பிள்ளைகளை என்செய்வது?

யுத்தகாலத்தில் அமெரிக்காவின் நீகிரோப் படைகள் இங்கிலாந்திலிருந்தபோது, அங்குள்ள வெள்ளைக்காரப் பெண்களுடன் இவர்களிற் பலர் சோர நட்புப்பூண்டு அதன்பயனாக 5000பிள்ளைகள் — வெள்ளைக்காரிகள் வயிற்றில் காப்பிரிப் பிள்ளைகளாய் — ஜெனித்துவிட்டன. இந்தப் பிள்ளைகளை என்செய்வது என்றபிரச்சினை இப்போது இங்கிலாந்தில் எழுந்திருக்கிறது. இப்பிள்ளைகளை இங்கிலாந்தில் வைத்திருக்கக்கூடாது, அவர்களை அப்படியே அமெரிக்காவுக்கு அனுப்பிவிடவேண்டும் என்று பிரிட்டிஷார் கூற, அமெரிக்க அரசாங்கமும் ஓரளவுக்குச் சம்மதித்தது.

இப்போது, அமெரிக்க பாராளுமன்றத்தில் மிஸ்ரர் ஜோன் ஜென்கின் என்பவர் சோரமாகப் பிறந்த இந்தப் பிள்ளைகளை அமெரிக்காவிற்குக் கொண்டுவரவொண்ணாது என்று ஓர் தீர்மானம் கொண்டு வரப்போகிறார். இவர் தீர்மானத்தை அமெரிக்க அரசாங்கம் ஒப்புக்கொண்டால், இந்த 5000 பிள்ளைகள் கதி என்ன?

விளம்பரம

வடமாகாணத்தி லிருக்கும் யாழ்ப்பாணம் டிஸ்றிறில் ஏளாலை கிராமத்திலுள்ள பெரியதம்பிரான் குளத்தின் கட்டுகளைப் பெரிதாயும் உறுதியாயும் கட்டுவதற்கு வடமாகாண ஏசண்டரவர்கள் 1947-ம் ஆண்டு மே மாசம் 13-ந் திகதி செவ்வாய்க்கிழமை பகல் 12 மணிக்குள் குறித்த விண்ணப்பப் பத்திரங்களை (ரெண்டர்) ஏற்றுக்கொள்வார்.

விண்ணப்பப் பத்திரங்கள் ரூபாய் ஐம்பது (50) கட்டி வடமாகாண ஏஜண்டரின் கையொப்பம் சாத்தப்பட்ட ஒவ்வொரு பற்றுச்சீட்டுக்கும் ரெண்டர் பத்திரங்கள் 1947-ம ஆண்டு மே மாசம் 10-ந் திகதி சனிக்கிழமை பகல் 12மணிக்குள் கொடுக்கப்படும்.

மறு விபரங்களை அவரிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

G 19 29—4—47

## திருச்சி ரேடியோ

**புதன் மே 30**

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 சமயபுரம் கே நாராயணசாமி பிள்ளை பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 வானொலி வாத்யகோஷ்டி 8-30 பாரசாலை பி பொன்னம்மாள் பாட்டு 9 முடிவு

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 சமயபுரம் கே நாராயணசாமி பாட்டு 2 தமிழில் செய்திகள 2-05 சமயபுரம் கே நாராயணசாமி பிள்ளை பாட்டு 2-15 கோடைக்கல்வி 2-45 முடிவு

மாலை 5 திருவீழிமிழலை என் சுப்பிரமணியபிள்ளை வயலின் 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராமநிகழ்ச்சிகள் 7 சித்ரகானம் 7 30 தமிழில் செய்திகள் 7-45 எழுத்தாளர் சங்கம் 8 திருவீழிமிழலை என் சுப்பிரமணியபிள்ளை வயலின் 8-30 பாரசாலை பி பொன்னம்மாள் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 ஆங்கிலப் பேச்சு 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-45 ஐரோப்பிய சங்கீதம் 10-30 முடிவு,

**வியாழன் மே 1**

காலை 7 15 கீதாரம்பம் 7-30 வி கே வேலுகுட்டி நாயர் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 காலைஇசை 8 30 திண்டுக்கல் ஜி கிருஷ்ணமூர்த்தி வீணை 9 முடிவு.

1 கதம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 எஸ் எஸ் பரமசிவம்பிள்ளை பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 எஸ் எஸ் பரமசிவம்பிள்ளை பாட்டு 2-15 கோடைக்கல்வி 2-45 முடிவு.

மாலை 5 வி கே வேலுகுட்டி நாயர் பாட்டு 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 புதிய வெளியீடுகள் 7-15 செய்தி விளக்கம் 7-30 தமிழில் செய்திகள் 7-45 முன்னேற்றம் ஒலிச்சித்திரம் 8 எம் ஏ கல்யாண கிருஷ்ண பாகவதர் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 ரேடியோ நாடகஇசை 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் 9-45 திண்டுக்கல் ஜி கிருஷ்ணமூர்த்தி வீணை 10-30 முடிவு.

**வெள்ளி மே 2**

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 தமிழில் செய்திகள் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 திருச்சி வாத்யகோஷ்டி 8-30 என் வி ருக்மிணி பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 எம் எஸ் நடராஜபாகவதர் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 எம் எஸ் நடராஜ பாகவதர் பாட்டு 2-15 கோடைக்கல்வி 2-45 முடிவு.

மாலை 5 ஸ்ரீரங்கம் ஆர் ரங்கநாதன் பாட்டு 5-40 குரான் ஷரீப் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 திருப்பாம்புரம் சோமசுந்தரம் சகோதரர்கள் நாகஸ்வரம் 7-30 தமிழில் செய்திகள் 7-45 தென்னிந்தியத் தொழிலாளி 8 ஸ்ரீரங்கம் ஆர் ரங்கநாதன் பாட்டு 8-30 திருப்பாம்புரம் சோமசுந்தர் சகோதரர் நாகஸ்வரம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 நால்வகை இசைத்தட்டு 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 10-30 முடிவு

## செய்தித் திரட்டு

சர்வசித்து வருடப்பிலப்பிலன்று யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை ஆதரவில் யாழ்ப்பாணஞ் சிறைச்சாலையிற் சைவமறியற்காரர் பொருட்டுப் புதுவருடவிழா ஒழுங்கு செய்யப்பெற்று கடவுள் ஆராதனை சிற்றுண்டி வழங்குதல் முதலியன நிகழ்ந்தபின் திரு த. குமாரசுவாமிப்பிள்ளை அவர்கள் "காரைக்காலம்மையார்" என்னும் பொருள்பற்றிப் பக்கவாத்திய சகிதமாக ஓர் கதாப்பிரசங்கஞ் செய்தனர்.

* *

புதிய இந்தியா மந்திரியான லிஸ்ரோவல் பிரபு, கூடியசீக்கிரம் இந்தியாவுக்கு விஜயஞ் செய்யலாம் என்று அமெரிக்க யூனைற்றெட் பிரஸ் செய்தி ஸ்தாபனம் கூறுகிறது.

* *

பிரபல பிரிட்டிஷ்தொழிற்கட்சி யங்கத்தவரும், இந்தியா விஷயமாகப் பாராளுமன்றத்தில் இந்தியர் கட்சியை எடுத்துரைப்பவருமான மிஸ்ரர் றெஜினல்ட் ஸோரன்ஸன் என்பவர் ஜெர்மனிக்கு விஜயஞ் செய்திருக்கிறார்.

* *

ஹிட்லரின் உதவியதிகாரியாக விருந்து, பின் இங்கிலாந்தில் விமானமூலம் இறங்கிய ஹேஸ் என்பவரைச் சிறையாக்கிய மிஸ்ரர் தானியேல் மக்பிறைட் என்பவர் சென்ற புதன்கிழமை கொழும்புக்கு விஜயஞ் செய்தார்.

* *

சென்ற வியாழக்கிழமை சிங்கப்பூரிலிருந்து கொழும்புக்கு வந்த பெலிக்ஸ் றஸல் என்னும் கப்பலில் 400 க்கு மேற்பட்ட மலேயா இலங்கையரும் வந்தனர்.

* *

அபிசீனியா இராஜயத்துக்கு 50,000 பவுண் பெறுமதியான 15 வெடிகுண்டு விமானங்களை விற்பதற்கு ஸ்வீடன் அரசாங்கம் நிச்சயித்திருக்கிறது.

* * *

பர்மா அரசியல். நிர்மாணசபைக்கு ஆக இரண்டே இரண்டு சமதர்மிகள்தான் இதுவரை தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள்.

* *

இலங்கை அரசாங்கசபை அநேகமாக ஜூலை மாதம் 10-ந் தேதி கலைக்கப்பட்டுவிடும் என்று ஓர் செய்தி கூறுகிறது.

* *

டென்மார்க் அரசரான கிறிஸ்ரியன் இறந்துவிட்டபடியால், அவரின் சிரேட்ட புதல்வனான பிரடேரிக் என்பவர் அரசராக முடிசூடப்பட்டிருக்கிறார்.

## மொஸ்கோ நாடகமுற்று

3-ம் பக்கத் தொடர்ச்சி

இந்த நாஸித் தலைவர்களின் உதவியுடன், ஜெர்மனியை ஒன்றுபடுத்தி அங்கே தன் செல்வாக்கைப் பூரணமாக நிலைநாட்ட ருஷியா முயற்சிக்கிறதாம்.

O

### வாலேஸ் அமெரிக்கா மீண்டார்

அமெரிக்காவின் உதவி ஜனாதிபதியாக விருந்தவரும், இப்போதுள்ள ஜனாதிபதியின் அரசியற் கொள்கைகளைக் கண்டித்து வருபவருமான மிஸ்ரர் ஹென்றி வாலேஸ் தமது ஐரோப்பிய பிரயாணத்தை முடித்துக்கொண்டு சென்ற ஞாயிற்றுக்கிழமை அமெரிக்காவுக்கு மீண்டுவிட்டார். இவர் அமெரிக்க பிரஜையாகவிருந்தும், அமெரிக்காவின் அரசியற் கொள்கைகளைக் கண்டித்து வெளிநாடுகளிற் பிரசாரம் செய்யலாகுமா? அது இராஜத்துரோகமாகாதா என்று அமெரிக்கப் பத்திரிகைகள் கிளர்ச்சி செய்து வருகின்றன.

O

### ரூமேனியாவில் அடக்குமுறை

ரூமேனியாவில் இப்போது ருஷிய ஆதரவு பெற்றுள்ள சமதர்மிகள் ஆட்சி நிலவுகிறது. ரூமேனியப் பாராளுமன்றத்திலே எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களையும், அவர்களை ஆதரிப்பவர்களையும் சிறையிலிட அத்தேச அரசாங்கம் நிச்சயித்து அப்படியே செய்து வருகிறது. திடீரென ரூமேனிய அரசாங்கம் இத்தகைய நடைவடிக்கைகளை எடுப்பதற்கான காரணம் இன்னும் பகிரங்கமாக வில்லை.

துவிச்சக்கர வண்டியில் இரண்டு பேர் பிரயாணம் செய்வது சட்டவிரோதமல்ல என்று பாணந்துறை நகரசங்கம் சென்ற வாரம் ஓர் தீர்மானம் நிறைவேற்றி யிருக்கிறது.

* *

வருகிற மே, ஜூன் மாதங்களில் ஆஸ்திரேலியாவிலிருந்து 20 லட்சம் அப்பிள் பழங்களை அரசாங்கம் இறக்கிமதி செய்யும். அவை சங்கக்கடைகள் மூலமாக பழம் ஒன்று 20 சதம் தொடக்கம் 25 சதம்வரை விற்கப்படும்.

விளம்பரமின்றேல் பெரும் பணமில்லை

# செய்தது யார்?

## 'நான் இல்லை' என்கிறார் லண்டன் மந்திரி

இலங்கைச் சமதர்மக் கட்சித் தலைவரான டக்ரர் எஸ்.ஏ.விக்கிரமசிங்ஹ சோல்பெரித் திட்டத்தின்படி அமைக்கப்படும் பாராளுமன்றத்துக்கு ஓர் அபேட்சகராக வரமுடியாது. காரணம் குறித்த ஓர் அரசியற் குற்றத்துக்காகத் தண்டிக்கப்பட்டமையே இது அநியாயம் என்று ஜனநாயக ஆட்சியில் உறுதிகொண்ட ஏவரதும் அபிப்பிராயமாகும்.

இவ்விஷயமாக டக்ரர் விக்கிரமசிங்ஹ இற்றைக்குச் சில நாட்களுக்குமுன் லண்டனுக்கு விஜயம்செய்து குடியேற்றநாட்டு மந்திரியைச் சந்தித்துப் பேசினார். இப்படியான தடையுத்தரவைத் தாமாகப் பிறப்பிக்கவில்லை என்றும். இலங்கையில் இருந்தே இப்படிச் செய்யவேண்டும் என்று கேட்டபடியால்தான், தாம் இந்த உத்தரவைப் பிறப்பித்ததாகவும் குடியேற்றநாட்டு மந்திரி டக்ரர் விக்கிரமசிங்ஹவுக்கு அறிவித்தாராம். [illegible] அதிகாரிகள் இத்தடையுத்தரவைநீக்கவேண்டுமென்று அறிவித்தால், தாம் அப்படிச்செய்ய ஆயத்தம் என்றும், குடியேற்றநாட்டு மந்திரி அறிவித்தாராம். ஆகவே இத்தடையுத்தரவுக்குக் காரணர் யார்? டக்ரர் விக்கிரமசிங்ஹ அடுத்த பாராளுமன்றத்தில் வருவது சிலஇலங்கை அரசியல் வாதிகளுக்கு விருப்பமில்லை என்பது பகிரங்க இரகசியம். இப்படியான தடையுத்தரவைப் பிறப்பிக்கவேண்டும் என்று மிஸ்ரர் சேனநாயக்காக்கோஷ்டி குடியேற்றநாட்டு மந்திரிக்குச் சிபார்சு செய்ததா?

டக்ரர் விக்கிரமசிங்ஹா இலங்கைக்கு மீண்டுவிட்டார். இந்தத் தடையுத்தரவை நீக்கவேண்டும் என்று ஓர் தீர்மானம் தாம் எடுத்தாளப்போவதாக அவர் அறிவித்தல் கொடுத்திருக்கிறார். இன்னும் சில தினங்களில் அது அரசாங்கசபையில் எடுத்தாளப்படும். அப்போது இவ்விஷயத்தில் விஷமம் செய்தவர்கள் யார் என்பது அம்பலத்தில் வெளியாகும். சேனநாயக்காக் கோஷ்டியின் உண்மையான மனப்பான்மை அப்போது வெளியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தபுராணக் கவி நுட்பம்

## சரவணப் படலம்

வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளை யவர்கள் வாய்க் கேட் டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும் பெருங் குறிப்புக்கள் இப் [ ] பகரக் குறியீட்டுடன் வெளிபிடப்பட்டுள்ளன.

ஆதி நாயகன் கருணையா யமலமாய்ப் பரம
போத நீரதா யிருந்ததன் கொங்கையிற் பொழிபால்
எதி லாததோர் குருமணி வள்ளமீ தேற்றுக்
காதன் மாமகற் கன்பினு லருத்தினுள் கவுரி.

ஆதிக் கடவுளாகிய சிவபிரானிடத்துள்ள திருவருள் மயமாயும், நிர்மலமாயும் மேலாகிய ஞான வியல்பாயுமுள்ள தமது திருத்தனங்களிற் சுரந்த அமிர்தத்தினை ஒப்பற்ற நிறம் விளங்கும் இரத்தினகசிதமான ஒரு கிண்ணத்திலே வந்தித்தமது இனிய இளையதிருக்குமாரராகிய முருகமூர்த்திக்குஊட்டினுர் (உலக மாதாவாகிய) ஈசுவரியார் என்பது கருத்து.

ஆதிநாயகன் கருணையாய், அமலமாய்ப் பரமபோத நீரதாயிருந்த பாலென்க; எது - ஒப்பு; கறத்தலின்றித் தானே சுரந்து பொலியும் பாலாதலின் "ஏற்று" என்ருர். மூத்த மகனிடத்தில் அதிக ஆர்வம் தந்தைக்கும் இளைய மகனிடத்தில் அதிக ஆர்வம் தாய்க்குமிருத்தல் உலகவியல்பாதல் பற்றி இங்கே காதன் மாமகன் என்ருர்; இதனை, "முன்னீன்ற தநயர்பாற் றந்தையருண் முழுதிருப்பப் - பின்னீன்ற தநயர்பாற்ருயுவக்கும் பெரிதென்பார்........" என வரும் உபதேசகாண்டத் திருவிருத்தத்தாலுணர்க; பாலைத் தாஞகப் பருகுமாற்றலற்ற விரகறியாக் குழந்தைபோற் குமரவேள் தோற்றியமையில் தாயார் பருக்கினுரென்பார் "அருத்தினுள் கவுரி" என்ருர்.

[கருணையாய் அமலமாய், போத நீரதாயிருந்த பால் என்க.] (23)

கொங்கை யூறுபா லருத்தியே குமரனைக் கொடுசென்
றெங்க ணுயகன் முன்னரே யிறைஞ்சுவித் திடலும்
அங்கை யாலவன் றனையெடுத் தகலமே லணைத்துப்
பொங்கு பேரரு ணீர்மையா லிருத்தினன் புடையில்.

தனது திருத்தனங்களிலிருந்து சுரந்த பாலை ஊட்டி குமரவேளாகிய குழந்தையை (தமது இருதிருக்கரங்களாலும்) அணைத்துக்கொண்டு போய் எங்கள் தலைவராகிய பரமசிவனுடைய திருமுன்னிலையில் கும்பிடச் செய்தலும், அச்சேயாகிய தெய்வத்தை தமது அழகிய திருக்கரத்தினுற் பற்றியெடுத்துத் தமது திருமார்போடணைத்து ஓங்குகின்ற தலையாய திருவருளோடு தமது (இடப்)பாகத்தில் வைத்தருளினுர் (கைலாசபதி)யென்பது கருத்து.

பரயபிதாவைக் கண்டமாத்திரத்தே தாமாக வணங்குதற்கேற்கிய விரகற்ற சிறு குழந்தைபோற் குமரவேள் காணப்பட்டமையினுல், இவ்வுலகிலுள்ள தாய்மார் செய்வதுபோல், இறைவி தம்சேயைக்கொண்டு பரமபிதாவை வணங்கவேண்டிய முறையைக் காட்டிக்கொடுத்துவணங்குவித்தாளென்பார், "இறைஞ்சுவித்து" எனப் பிறவினையாற் கூறினுர், உலக மாதாவாகிய ஈசுவரியாரின் திருவுளப் பாங்கையுணர்ந்து எங்கள் முருகமூர்த்தி சிசுவாயும் பின் குழவியாகவும், பின் பாலனுகவும் விளையாடி யருள்வரென்பது இத்திருவிருத்தங்களால் உணரக் கிடக்கின்றன; அருச்சுனனுக்கு அருள் செய்யவேண்டிப் பரமபதி வேட்டுவ வடிவங்கொண்டு முற்பட்டுச் செல்ல, இறைவியார் இந்த முருகவேளைப் பிறந்து ஆறு மாசந்தானும் முற்ருத (தலைநிமிரச்செய்து ஒக்கலையில் வைத்துச் செல்லுதற்குப் பராயமற்ற) சிசுவாகத் தம் இரு கரங்களிலும் ஏந்தியவண்ணந் தொடர்ந்து சென்ருரென்னுங் கருத்தமைய "........சிரேனல் விளைகிரிக்குத் தேவதையாம் குழவியையுஞ் செங்கையேந்திப்—பாரேனை யுலகனைத்தும் பரிவுடனே யீன்ருள் தன் பதிபின் வந்தாள்" என்று ஆசிரியர் வில்லிபுத்தூரார் பாரதத்திற் கூறியுள்ளார்; சூரபன்மனுக்குச் சிறிது அருள்பாலிக்கும்வண்ணம் அவனுடைய முன்னிலையிற் சகல அண்டங்களும் புவனங்களும் அவற்றின்கட் பொருந்திய சராசரங்களும் தம் திருமேனியில் அடங்கும்வண்ணம் பாரமேசுவரத் திருக்கோலம் (திருப்பெரு வடிவம்) கொண்டருளிய முழுமுதற் கடவுளாகிய முருகமூர்த்தி, இங்கே இப்படிச் சிசுவடிவமும் குழந்தை வடிவமும், பாலசுப்பிரமணிய வடிவமுங் கொண்டு திருவிளையாடல் செய்தல் அப்பெருமான் ஆன்மாக்களின்மீது கொண்ட கருணைத்திறமென்று அறிவுடையோர் உணர்ந்து அப்பெருமான்மீது பத்திசெய்து உய்வரென்க. (24)

அருத்தி தந்திடு சமரவே ளொருபுடை யமரப்
பெருத்த மன்னுயிர் யாவையு முன்னரே பெற்ற
வொருத்தி தன்னையுங் கையினு லொய்யென வாங்கி
யிருத்தி னுன்றன திடந்தனி லெம்மையா ளிறைவன்.

உமாதேவியார் தந்தருளிய குமாரக்கடவுள் ஒப்பற்ற இடப்பாகத்தில் இருந்தருள, பரந்த நிலைபெற்ற ஆன்மகோடிகளனைத்தையும் ஆதியிற் பெற்றருளும் தலைவியாகிய ஈசுவரியாரையும், எங்களையெல்லாம் அடிமையாகவுடைய பரமேசுவரன் தம் திருக்கரத்தால் விரைவில் எடுத்து தம்முடைய இடப்பாகத்தில் இருத்தியருளினுரென்பது கருத்து.

பெருத்த மன்னுயிர் யாவையும் தந்திடுமொருத்தியால், அந்த இடபத்திலே தாஞக ஏறிக்கொள்ளுதல் இயலாதோ? இறைவன் திருக்கரங்கொடுத்து ஏறச்செய்யவேண்டுமோ எனின், இவைகளெல்லாம் இறைவனும் இறைவனுடைய திருவருட் சத்தியாகிய இறைவியும் மன்னுயிர் கடைத்தேறும்வண்ணம் நாடக மாத்திரையாகச் செய்யும் கருணைத் திருவிளையாட்டென்க. குமாரக்கடவுள் இருவர்க்கும் நடுவணுற இறைவியை எம்மையாளிறைவன் இருத்தியருளினுரென்பது அடுத்த திருவிருத்தத்தினுல் உணரக் கிடக்கின்றது.

[அருத்தி தந்திடு - உமாதேவியாராற் றரப்பட்ட; அருத்தி-பொருள்; சகல பொருள்களையுந் தருவோராதலின் இவ்வாறு பொருள் கொள்ளப்பட்டது; விருப்பத்தைத் தருகின்றவரென்றலுமாம்.] (25)

# ஜின்னு சம்மதம்

## தலையில்லா முண்டத்தில் திருப்தி

தலையில்லா முண்டம்போன்ற பாகிஸ்தான் தந்தால்போதும் என்று ஜின்னுசாய்பு இராஜப்பிரதிநிதியிடம் கேட்டிருப்பதாகப் பிந்திக் கிடைத்த தந்திச் செய்திகள் கூறுகின்றன கூடிய சீக்கிரத்தில் இராஜப்பிரதிநிதி பாகிஸ்தான், ஹிந்துஸ்தான் என்னும இரு கண்டங்களுக்குமான கருமங்களையாற்றுவார்என்றும் இரண்டு மந்திரசபைகளை (ஒன்று பாகிஸ்தானுக்கும், மற்றது ஹிந்துஸ்தானுக்கும்) அமைப்பார் என்றும் பம்பாய் குரோனிக்கில் பத்திரிகை கூறுகிறது. இதற்கிடையில் அரசியல் நிர்மாண சபை நேற்றைத்தினம் புதுடெல்கியிற் கூடிக் கருமம் ஆற்றியது.

## பாகவதர் கிருஷ்ணன் விடுதலை

பிரபல சினிமாநடிகரான எம். கே. தியாகராச பாகவதரும், என். எஸ் கிருஷ்ணனும் சென்னை உயர்தர நீதி மன்றத்துத் தீர்ப்புப்படி சென்ற வெள்ளிக்கிழமை விடுதலையை அடைந்தார்கள்.

# விலகுங்கள்!

## முல்லைத்தீவு நாடகம்

முல்லைத்தீவுப் பட்டினசங்கம் புதிதாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டபின், போதிய அங்கத்தவர்கள் சமுகமளிக்[illegible]மையால், ஷை சங்கக் கூட்ட[illegible]வரை ஒன்றும் நிகழவில்லை[illegible] இவ் விஷயத்தில் இரண்டு அங்கத்தவர்களின் "விஷமத்தனமே" காரணமென்று சொல்லப்படுகிறது. சென்றவாரம் முல்லைத்தீவு வரியிறுப்போரின் கூட்டமொன்று கூடி, குறித்த 2 அங்கத்தவர்களும் தம் பதவியைவிட்டு விலகவேண்டு மென்றும், இவ்விஷயமாக ஸ்தல ஸ்தாபன மந்திரிக்கு அறிவித்து ஏற்றன செய்ய வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

## எகிப்தில் போர்மன்

ஹிட்லரின் பிரதியதிகாரியாகவிருந்து ஜெர்மனி வீழ்ச்சியடையும் நேரத்தில் மாயமாக மறைந்த மார்ட்டின் போர்மன் என்னும் நாஸித் தளபதி இப்போது எகிப்தில் நிற்கக்கூடும் என்று பிரிட்டிஷ் உளவறியும் இயக்கத்தலைவர்கள் அந்நாட்டில் விசாரணை புரிந்து வருகிருர்க.

## விவாக விஞ்ஞாபனம்

### டக்ரர் சண்முகநாதன் அருந்ததி

கொழும்புத்துறை திரு. S. தம்பிராசா அவர்களின் புதல்வரும், யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலையிற் கடமை பார்ப்பவருமாகிய டக்ரர் சண்முகநாதனவர்களுக்கும், வண்ணார்பண்ணை ஐயனுர் கோவிலடிவழக்கறிஞராய் விளங்கிய திரு R.V.கணபதிப்பிள்ளையவர்களின் புதல்வியும், முதலியார் P.இராசகோபாலவர்களின்பேர்த்தியுமாகிய திருவளர்செல்வி அருந்ததியம்மாளுக்கும் வருகிற வெள்ளிக்கிழமை (2-5-47) இரவு பதினேரு மணிக்கு மேல் வரும் சுபமுகூர்த்தத்தில், மேற்படி ஐயனுர் கோவிலடியிலுள்ள "இராசவிலாச"என்னும் மணமகளில்லத்தில், விவாகம் இனிது நிறைவேறுமாதலால் அத்தருணம் தங்கள் சுற்றமித்திரரனைவரையும் சமுகஞ்செய்து, தம்பதிகளை ஆசீர்வதித்துக் கொண்டாட்டத்திற் பங்குபற்றும்வண்ணம் மணமகளின் தாயார் கேட்டுக்கொள்ளுகின்ருர்.

[பிரத்தியேகமான விவாக விஞ்ஞாபனம் அனுப்பப்படவில்லை என்பதை அன்பர்கள் அறிவார்களாக]

"இராசவிலாச" வண்ணார்பண்ணை,
26—4—47 (M. 16, 29)

## சைவப்பிரசங்கம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை யாதரவில்23—4—47 புதன்கிழமை இரவு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ் வித்தியாசாலை மண்டபத்தில் ராவ்பகதூர் C. M இராமச்சந்திரன் செட்டியார் அவர்கள் 'பிள்ளையார் தத்துவம்' என்னும் பொருள்பற்றி ஓர் சிறந்த சொற்பொழிவாற்றினுர்கள். சைவசமயிகளால் வழிபடப்பெறுகின்ற மூர்த்தங்களுக்குள் முதன்மை யுடையவர் விநாயகரெனவும் ஆனதுபற்றிப் பிள்ளை என்ற பதத்துடன் ஆர் விகுதி சேர்ந்து உண்டாகும் பெயர் தெய்வங்களுக்குள் விநாயகரையன்றிப் பிற தெய்வங்களைக் குறியாதெனவும் எல்லாக் கலைகளுக்கும் எல்லா ஒளிக்கும் எல்லா ஒலிக்கும் மூல தெய்வமாக விருப்பவர் விநாயகரேயென்றும் பிரசாரகர் தமது விரிவுரையிற் குறிப்பிட்டார். நன்றிகூறித் தேவாரம் ஓதப்பெற்றபின் கூட்டம் நிறைவெய்தியது.

## யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை

நிகழும் சர்வசித்துஞூ சித்திரை மாதம் 20ந் திகதி (3—5—47)சனிக்கிழமை பி. ப 4 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ் வித்தியாசாலை மண்டபத்தில் ஷை சபையின் விசேட பொதுக்கூட்டமொன்று நடைபெறும்.

## தேகவியோகம்

சு. காளியப்பர்

திருகோணமலை, தம்பலகமம், பட்டிமேட்டில் பிரபல தனவந்தரும் பெரியாரும், நிலச்சுவாந்தாரும் 47 ஆண்டுகளாக விவாகம் பிறப்பு இறப்புப் பதிவுகாரராய் கடமையாற்றி இளைப்பாறிய ஸ்ரீமான் சுப்பிரமணிய உடையார் காளியப்பர் அவர்கள் தமதில்லத்திற் சொற்ப மணிநேர வயிற்றுநோய் காரணமாக 71 வது வயதில் தமது மனைவி மக்கள் சகோதர சகோதரிகள் மைத்துனர் மைத்துனிமார், மருமக்கள், பேரப்பிள்ளைகள் ஏனையபந்துமித்திரர்கள் வருந்த வியஞூ பங்குனிமாதம்14 ந் திகதி இவ்வுலகவாழ்வையொருவினர். அவருடைய அந்தியேட்டிக் கருமங்கள் கன்னியாவிலும் அவருடைய இல்லத்திலும் நடைபெற்றன,

—கடித

## வங்க பாகிஸ்தான் எதிர்ப்பு இயக்கம்

வங்காளத்தைப் பிரிவினை செய்வதையும் பாகிஸ்தானையும் எதிர்ப்பதாகவும் இதையநுசரித்துப் பொதுஜன அபிப்பிராயத்தைப் பக்குவப்படுத்துவதற்காகவும் அகில வங்காளச் சபையொன்று ஸ்ரீ சரத் சந்திரபோஸ் தலைமையில் நிறுவப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவாசாரம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆய்ந்திடுமறைகள்போற்று மாதி
தன்தீர்த்தம் போது
சாந்தமோடவிகடம்[illegible] சதுர்
முகன்முதல்[illegible]ர்க்கும்
வாய்ந்திடு முனிவர்[illegible]ற்று
ளார் தமக்கு மன்னன
ஈந்திடவவற்றையன்னோ ரியாவரு
மணிந்துட்கொண்டார்.

எனவருங் கந்தபுராணத் திருக்கல்யாணப் படலத் திருவிருத்தத்தாலும் அதற்கடுத்த திருவிருத்தத்தாலும் அறிந்து கொள்ளலாகும். ஆசாரியர் சந்தனத்தால் அலங்கரிக்கப்பட்ட அங்கங்களை யுடையவரென்று காரணாகமஞ் செப்புகின்றது. ஆதலாற் சந்தனதிலதமிடுதல் குற்றமாகாதென்று பெறப்படுகின்றது. "கோயிலெசமானனை முன்னாகக் கொண்டு ஆலகங்களில் விபூதி கொடுக்க" என்று யாரணாகமம் கூறிற்று.

நோயுள்ள காலத்திலும, கள்வராலும் அக்கினியினாலும் அரசர்களாலும் பயமுண்டான காலத்திலும், குருவின் காரியம் தேவகாரியம் நேரும்பொழுதும், நித்திய கருமலோபம் வரின் அதனாலே தோஷமில்லை. என்பது வயதிற்கு மேற்பட்டவர்களும், பதினாறு வயதிற்குட்பட்டவர்களும் பெண்களும் நோயாளரும் ஆசாரத்தில் லோபம் அடைந்தார்களாயின், அதன் பொருட்டு விதித்த பிராயச்சித்தத்திற் காற்பங்கு பிராயச்சித்தம் செய்தாற் தீரும்.

பெற்றோரும் உபாத்தியாயர்களும் குருமாரும் சைவாசாரங்களைப் பிள்ளைகட்குப் பயிற்றவேண்டியவராவர். பெற்றோர் தம் பிள்ளைகட்குச் சமயாசாரங்களை இளம் பிராயத்திற்றானே பயிற்றக் கடமைப்பட்டுள்ளார்கள். உபாத்தியாயர்கள் சமயக்கல்வியை வித்தியாசாலைகளிற் கிரமமாகப் பயிற்றிவரல் வேண்டும். சமயாசாரங்களும் சமயக்கல்வியும் ஊட்டப்படாதொழியின் அவ்வித்தியாசாலையாற் பெறப்படும் முக்கிய பிரயோசனம் இல்லாதொழிகின்றதன்றோ! உபாத்தியாயர்கள் பிள்ளைகளுக்குச் சமயக்கல்வியைப் புகட்டா தொழியின் ஈசுரபக்தி உதிப்பது அரிது; ஆசிரியர்கள் தம்முடைய சொற்செயல் இரண்டிலும் உறுதியுடையவர்களாயிருந்தாற்றான் மாணாக்கரும் அவர்களைப் பின்பற்றி நடக்கத் தலைப்படுவர். ஆசிரியர்கள் ஸ்நானம் சந்தியாவந்தனம் ஆலயவழிபாடு விரதமனுட்டித்தல் முதலியவற்றைத் தாம் கைக்கொள்ளாது விட்டுத் தம் மாணாக்கர்களுக்குப் போதிக்கத் தலைப்படுவரேல், அவர்களுடைய போதனையாற் பெறப்படும் பயன் முயற்கொம்பேயாம். இவை முதலிய விஷயங்களை இந்துசாதனப் பத்திராசிரியர் அவர்கள் பல பிரசுரங்களில் வெளிப்படுத்தி வருகிறார்கள். அவற்றைப் பெற்றோரும் உபாத்தியாயர்களும் ஊன்றிப் படித்தாற் பெரும் பயனுறுவர். மேலும் குருபதவியில் இருப்போர் சமயபோதனை செய்தலிற் கண்ணுங் கருத்துமுடையவராயிருத்தல்வேண்டும்.

சூரியன் உதிப்பதற்குமுன் எழுந்து இயன்ற சுத்திசெய்து விபூதியிட்டுக் கொண்டு சிவத்தியானஞ் செய்தல் வேண்டும். சந்தியாகாலத்தில் நித்திரை செய்தவன் அசுத்தன். நித்திரை வசத்தால் தியானஞ் செய்யவில்லையாயின் இரண்டுமடங்கு தியானித்தல் வேண்டும், புத்திபூருவமாகத் தியானிக்கவில்லையாயின் அக்குற்றம் நீங்கும் பொருட்டு மூலமந்திரத்தை இருநூறுருச் செபித்தல்வேண்டும். விபூதி தரியாது புறத்தே போனாற் பிராயச்சித்தமாக மந்திரஜபஞ் செய்தல் வேண்டும். ஈரவஸ்திரமுடுத்துக்கொண்டு சந்தியாவந்தன முதலிய கிரியைகள் செய்தலாகாது, செய்யின் அக்குற்றம் நீங்கும்படி மீண்டும் ஸ்நானஞ் செய்தல் வேண்டும். ஆசௌசகாலங்களில் மாத்திரம் ஈரவஸ்திரத்துடன் சந்தியாவந்தனாதிகளைச் செய்யலாம். ஸ்நானஞ் செய்யப் பயப்படுபவர்கள் போர் செய்ய அஞ்சும் அரசன்போல் துன்பமடைவர் என்று சைவசமயநெறி கூறும்.

போர்க்கஞ்சும் பூபதிடோற் கீழ்ப்
புதுவரே குளிர்ந்த
நீர்க்கஞ்சு மாதவரு நேர்கு.

'அந்தணன் நீருக்கஞ்சான" என்பது பழமொழி

நன்றியறிதலும், பொறையுடைமையும், இன்சொல்லும், இன்னாதன செய்யாமையும், கல்வியும், ஒப்புரவறிதலும், அறிவுடைமையும், நல்லினத்தாரோடு கூடலும் என்னு மெட்டும் சதாசாரங்களுக்குக் காரணங்களாம் என்று ஆசாரக்கோவை கூறும்.

பொய் சொல்லுதல் கொலைசெய்தல், பிறருக்குத் துன்பஞ் செய்தல், பிறர் தரித்த வஸ்திரம் பாதரட்சை முதலியவைகளை அணிதல், ஆசௌசமுடையவரிடத்துப் போசனம்பண்ணுதல், தம்மிற்றாழ்ந்த வருணத்தார் அந்நிய சமயிகள் என்கின்ற இவர்களுடனிருந்தாவது இவர்கள் காணவாவது போசனம் பண்ணுதல், முதலியவை அநாசாரங்களாம். இன்னும் கைசேர்த்து நீரருந்துதல், நகத்தையும் மயிரையும் பிடுங்குதல், நகத்தாற் பல்லைக் கிண்டல், இருளிலே தனிவழிச் செல்லுதல் முதலியவைகளை நீக்குதல் வேண்டும். பதிதர்களையும் இழிந்தோர்களையும் புறச் சமயிகளையும் தீண்டுதலும் விலக்கப்பட்டனவாம். நேர்ந்தவுடத்து ஸ்நாநாதிகளாற்சுத்திபெறுக. இவற்றிற்குப் பிரமாணம் ஆறுமுக நாவலரவர்களெழுதிய நூல்களும், ஆசாரக்கோவை முதலிய நீதிநூல்களும் சிவாகமங்களுமாம்.

அரசன் உபாத்தியாயன் தாய்தந்தை தம் முன்னோன் என்றிவர் ஐங்குரவர் எனப்படுவர், இவர்கள் தேவர்களைப்போற் போற்றப்படத் தக்கவராவர்.

ஆசாரியரையுஞ் சிவபக்தர்களையும் மனுடரென்று நினையாது சிவபெருமானாகவே பாவித்து வழிபடல்வேண்டும். குருவையும் பிராமணர்களையும் சிவனடியாரையும் உபாத்தியாயரையும் பிதாமாதா முதலியோரையும் தீக்ஷையினாலாவது வயசு முதலியவற்றாலாவது உயர்ந்தவர்களையும் கண்டமாத்திரத்தில் இருக்கைவிட்டெழாத பாவிகள் நரகத்தில் வருந்துவார்கள்.

ஆசாரக்கோவை

"கால்வாய்த்தொழுவுசமயம்எழுந்
திரும்பாசாரம் என்ப குரவர்க்கிவை
யிவை சாரத்தாற்சொல்லிய பன்று."

வியாழகுரு விண்ணுலகில்இந்திரன் சபையை யடைந்தபோது பெண்மயலில் அகப்பட்டிருந்த இந்திரன் குருவின் வருகையைக்கண்டும் இருக்கை விட்டெழுந்து அவரை வணங்காது வாளாவிருந்தான். அதுகண்ட குரு திரும்பிப் போனார். உடனே இந்திரனது செல்வம் குறையத் தொடங்கிற்று. இந்திரன் தனது அரசாட்சியையுமிழந்து பலவிதமான துன்பங்களையெல்லாமனுபவித்தான். பின்பும் வியாழ குருவின் அருளினால் மதுரையையடைந்து சிவார்ச்சனை செய்து துன்பத்தினின்றும் நீங்கினனென்று திருவிளையாடற்புராணங் கூறும்.

(வரும்)


## விற்பனவு விளம்பரம்

கந்தர்மடம் பலாலி றோட்டில் 18 பரப்புக் கொண்ட கல்வீடு வளவு விற்பனைக்கிருக்கிறது. விரும்பினோர் கந்தர்மடம் பழம்றோட் சி சதாசிவம்பிள்ளை (ஆசிரியர்)யோடு நேரிற்பேசி ஒழுங்கு செய்க.

M 14 25 — 29

## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பண ரூபா

**134,3670**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14 20-11-46—20-11-47 (தி)

## பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருறாத்தல் விலை ரூபா 25
அரைறாத்தலுக்கு ரூபா 12-50
கால்றாத்தல் ரூபா 6-25

விலாசம்:

க. ஆறுமுகம்பிள்ளை
கி. 156, செக்கடித்தெரு கொழும்பு

Std. 1. 26—3—47 to , 1—4—48

## கந்தசாமி வைத்தியர்
## அமிர்த சர்க்கரை லேகியம்

தாதுவிருத்தி யுண்டாகி நரசிங்கம் போன்ற தேக பலத்தைத் தருவதில் இணையற்ற லேகியம். நெடுநாட்பட்ட வாதங்கள் எவற்றையுந் தீர்க்கும். பித்தக் கிறுதி பாண்டு குன்மம் நித்திரையின்மை மூளைக் குழப்பம் இருமல் அரிகுரல் குடற்புண் மலக்கட்டு மூலவாய்வு அசீரணம் இவைகளைமாற்றி நல்ல பசிஉண்டாக்கும். மேகம் மேகத்தடிப்பு நீரழிவு நீர்க்கடுப்பு நீங்கும். கெற்பனிகட்கு உண்டாகும் வாந்தி அரோசியம் இருமல் மலசலக்கட்டு நீங்கும், கருவை அழியாமல் காக்கும். பாலர்கட்கு கணை பாண்டு இராக் காய்ச்சல் இருமல் தீர்க்கும் இணையற்ற சஞ்சீவி.

பெரியவர்கள் காலை மாலை 1 கழஞ்சு வீதம், சிறியவர்கள் காற் கழஞ்சு அரைக்கழஞ்சு வீதமும் சாப்பிடலாம்.

**கால் றாத்தல் விலை ரூபா 5-00**

வீ. பீ. பீ. யில் அனுப்புவோம்

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை.

Std 9 1-11—30-4 (செ)

# இந்துசாதனம்
## ஆங்கில-தமிழ்ப் பிரசுரங்கள்

பத்திரக்கிரயம் (முற்பணமாக ஒருவருடத்திற்கு)

| | யாழ்ப்பாணப்பட்டின எல்லைக்குள். | வெளியூர். | மலாய்நாட்டுக்கு. |
|---|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச |
| இந்துசாதனத் தமிழ்ப் பிரசுரம் | 6—50 | 9—50 | 10—50 |
| இந்துசாதன ஆங்கிலப் பிரசுரம் | 6—50 | 9—50 | 10—50 |
| இரு பிரசுரங்களுஞ் சேர்ந்து | 10—50 | 13—50 | 15—00 |

பத்திரக்கிரயம் முதலிய பண விஷயம் எதுவும், இந்துசாதன மானேஜருக்கே அனுப்பப்படல் வேண்டும்,

மனேஜர், இந்துசாதனம், வண்ணார்பண்ணை.


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Tuesday, April, 29 1947,

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org